உ

கடவுள்துணை.

கள்ளுக்கடைசிந்துயென்னும்

குடியர்சிந்து.

புகையிலைச்சிந்து



இவை,

சிறுமணவூர்,

முனிசாமிமுதலியாராலியற்றப்பட்டு,

செஞ்சி - ஏகாம்பரமுதலியாராலும் மியற்றப்பட்டு.

பா-சிவலிங்கையரவர்களது

ஆதிகலாநிதி அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பட்டது.

1900.

சிவமயம்.

கள்ளுகடைசிந்து.

விருத்தம்.

நம்பினான்யிருந்தகள்ளே நாடியையறிந்தகள்ளே
தம்பியுந்தகப்பன்பாட்டன் தலம்பரைகண்டகள்ளே
வம்புநீசெய்தாய்கள்ளே வருவையோசொல்வாய்கள்ளே
சொம்புபோல்குடுவைகள்ளேசோறுபோல்கொதிக்கும்கள்ளே
தங்கம்போலானகள்ளே தைரியங்கொடுக்குங்கள்ளே
எங்களைவளர்க்குங்கள்ளே எங்கேபோயொளித்தாய்கள்ளே
சிங்கம்போலெகுருங்கள்ளே ஜெயிலுக்குஅனுப்புங்கள்ளே
பொங்கியேவருகுங்கள்ளே புறப்பட்டுவருவாய்கள்ளே

ஆனந்தக்களிப்பு.

ஜாடியே உனக்கொருகும்பிடு அந்தசாராயங்குடித்தாக்கால்பேதியெடுக்குது, புட்டியே உனக்கொருகும்பிடு அந்தபீரைக்குடித்தாக்கால் சோரைக்கெடுக்குது கள்ளே உனக்கொருகும்பிடு அந்தகஞ்சாவடித்தாக்கா நெஞ்சைவுலத்துது மரமே உனக்கொருகும்பிடு அந்தமதத்தையிழுத்தால் பலத்தைக்குரைக்குது எப்போவருவாயோ கள்ளே உனக்கிதுஞாயமல்ல நீயெழுந்துவாகள்ளே.

இ-ம்-நாதநாமக்கிரியை-ஆதிதாளம்-பல்லவி.

வந்துதேகள்ளு ஈஸ்வரன்போலே வந்துதேகள்ளு

அனுபல்லவி.

வந்துதேபார்கள்ளு வாகனங்கருவாடு
நொந்துயிருந்தபேரை நெட்டித்தள்ளிக்கொண்டு

சரணங்கள்.

ஆதிவிலைகளெல்லாம் அடிமாண்டுபோச்சுது
அஞ்சணாஆரணா படியொன்றுஆச்சுது
சோதியதன்சுருக்கும் சூரியனுக்குமேலு
சுள்ளைகடித்துக்கொண்டு உள்ளுக்குக்கள்விட்டால்
யெழும்புதேபோதை-தலைக்குமேல்கைதூக்கி
கடிக்குதேபல்லை

ஆரானுபோனாலும் ஆட்டின்மயிரேபோச்சி
அதுகுடிக்கும்போதை காட்டுப்புலியும்சீச்சி
பாரில்பட்டையும்பத்தாய் குழந்தைக்கும்பாச்சி
பாட்டாக்கள்ஒருமூச்சி பாணந்தடுத்தும்போச்சி வந்
ரகுபதிகடைகள்ளு ராவெல்லாங்குடையிது
ரவுண்டொணுக்கள்ளு கிருக்குகள்வாங்குது
பரைச்சேரிகடைக்கள்ளு பாடுதுஆடுது
பாழுஞ்சுடுகாட்டுக்கடைகள்ளு தலைகிழாய்துள்ளுது வந்
இதுவென்னகள்ளுபலவைதொட்டிகள்ளு ஒழுவுதேசொள்ளு
பெண்சாதிஎதிர்த்தாக்கா பளிச்சென்றுமாட்டுது
பிள்ளைகயினுவென்றால் சொள்ளையிலடிக்குது
தன்பேச்சுபோல்வந்தால் தட்டிக்கொடுக்குது
தடுத்துசொன்னால்பல்லை கடித்துமுடுக்குது
எடுக்குதேகிருக்கு நாலுபேர்பிடித்தாலும் பிழுக்குதேமுரப்பு

குடியர் அலங்காரம்--வெண்பா

காலைக்குடியரெல்லாம் கவைக்குதவார்கள்குடிப்பார்
வேலைக்கும்போகார் வெரியனைப்போ-லலைவார்
வறுமைவந்தபோது வேலைக்குப்போவார்
தருமமோகுடியர்க்குத்தான்

(புரு)முக்கிமுக்கிகஷ்டப்பட்டுகேளடி பெண்ணே
மூணுபணங்கொண்டுவந்தேன்பாரடி கண்ணே
பக்குவமாய்செலவுபண்ணடி பெண்ணே
பாட்டாக்கள்ளுக்கொருபணந்தாக்கடி கண்ணே
(பெ)கள்ளைமறந்திட்டாகுடிகார பாவி
காலையிலகுடியாதடாசதிகார பாவி
பிள்ளைகுட்டிபெத்தாயோடாசண்டாள பாவி
யின்னம்புத்திவல்லையேடாகுடிகார பாவி
(புரு)சேனைநாள்பழக்கமடிமுட்டாளு பெண்ணே
சென்மத்திலேவூரிப்போச்சேகெட்டண்டி கண்ணே
நானுமட்டுங்குடித்தேனென்றுஎண்ணாதே பெண்ணே
நாலுமூணுதலம்பறையாய்நடக்குது கண்ணே
(பெ)குடிக்கேனென்று சத்துயங்கள்பண்ணையே பாவி
குடல்பழுத்துதென்றுகதைசொன்னையேபாவி பாவி
ஜாடிகள்ளுடன்குலைக்கிப்போதாதே பாவி
சாப்பிட்டாலும்வீண்சண்டைகள்செய்யாதே பாவி
(புரு)மனவருத்தப்படவேதாலேகேளடி பெண்ணே
மாஜினமாகிலுந்தின்னுவாரண்டி கண்ணே

துணதுணென்றுபேசாதடி மூட்டாளு பெண்ணே
தூட்டுகூடகுறைஞ்சிபோச்சி தூக்குது கண்ணே
(பெ)பணம்போனாலும்போகுதையா எந்தன் கணவா
பங்கியுண்டைபழக்கவேண்டாம் எந்தன் கணவா
குணத்தின்படிநடப்பேனையா எந்தன் கணவா
கும்மாமட்டுங்குடுக்கவேண்டாம் எந்தன் கணவா
(புரு)கும்மாவுன்னைகொடுப்பதில்லைகேளடி பெண்ணே
குடிக்கமட்டும்லொத்தைபணந்தாக்கடி கண்ணே
சும்மாசும்மாசொன்னேனென்றுயெண்ணாதே பெண்ணே
சோத்துபானையெகிரிப்பூடுந்தவறினால் கண்ணே
(பெ)சோத்துபானைஎகிரிபோனால் கேளடா பாவி
உன்கூத்துதாண்டாகாஞ்சிபோகும்குடிகார பாவி
நேத்துசொன்னசத்தியத்தைமறந்தாயே பாவி
நெஞ்சிமட்டும்நெட்டிவிட்டுவந்தாயே பாவி
(புரு)குடியருக்குசத்தியங்களேதடி பெண்ணே
கூச்சலிங்கேபோடவேண்டாம்கேளடி கண்ணே
படியடித்துபோதைகொஞ்சம்காணண்டி பெண்ணே
பணமிருந்தால்பட்டைகுடித்துவருவண்டி கண்ணே
(பெ)பட்டைமூஞ்சில்இடிவிழுக குடிகார பாவி
பாட்டாவுடன்பட்டைசேர்ந்தால்மோசண்டா பாவி
கஷ்டப்பட்டுபணத்தைவீணாய்அழிக்காதே பாவி
காலங்கருப்பானதினால்சொன்னேனண்டா பாவி
(புரு)பணம்போனாலும்சட்டம்போச்சிகேளடி பெண்ணே
பாட்டாயடித்தால்கையுங்காலுமுரைக்குது பெண்ணே
கணக்குபார்த்துகுடிக்காவிட்டால்கேளடி பெண்ணே
காலணாகையில்கூடகிட்டாது பெண்ணே
(பெ)ஓயாதகுடிகுடியாதசண்டாளப் பாவி
உத்தியோகத்தில்மண்விழும்குடிகார பாவி
ஏழைவயிறெரியயெறியசதிகார பாவி
எப்படியும்நாசமாவாய்குடிகார பாவி
(புரு)உத்தியோகம்போனாலுமெந்தன்சட்டம்போச் சடி
ஊருடமையில்லவிட்டால்வெறியு மேதடி
எத்தனைபேர்யேமாளிகள்ஊரில் பாரடி
எவனாகிலுங்கொடுத்துபோறான்உனக்குயென் னடி
(பெ)பஞ்சைபோலேகற்றகல்விபடிக்காதே பாவி
பாரிலுள்ளோரெல்லாம்வுன்போல்குடித்தாரே பாவி
செஞ்சியேகாம்பரங்கஷியைகேளடா பாவி
சுகப்படுவாய்புவிமீதில்குடிக்காதே பாவி

விருத்தம்.

பெருமானே தரிசனமேசொல்லக்கேளாய்
பேருனபச்சைமுளகா யுப்புங்கூட்டி
காடானகாக்கின்றுனி நடுவில்வைத்து
கள்ளனேப்படியிலூற்றி நுரைத்தள்ளி
அரகராவென்றுள்ளே செலுத்திவிட்டால்
ஆதிசிவனயன்மாலு மேதிரேகிப்பார்
பிரியமாய்மதுசெய்யு மருத்துவத்தை
பரிட்சித்துக்கொண்டவர்க்கு மோட்சந்தானே

நாதநாமக்கிரியை பல்லவி.

சாதுகளைக்கெடுக்குதையா பாழுங்கள்ளுயிது
சாப்பிட்டால்மொரைக்குதையா பாழுங்கள்ளுயிது

அநுபல்லவி

சாதுக்களைக்கெடுக்குது சாப்பிட்டால்வெரிக்குது
பாதைபடுத்துது பவுசைக்கெடுக்குதுசாது

சரணங்கள்.

பிரியமாயழைக்குதையா பாழுங்கள்ளுயிது
படிவாங்கிநெட்டுதையா பாழுங்கள்ளுயிது
பிரியமாயழைத்து படிவாங்கிநெட்டுது
வெரிகொடுத்தாதிட்டுது வெளியேநெட்டிதள்ளுது

கண்டவரைகூட்டுதையா யிந்தகள்ளு
கடன்வாங்கசெய்யுதையா யிந்தகள்ளு
கண்டவரைகூட்டுது கடைகடைக்குஓடுது
சண்டையைவலிக்குது தெண்டங்கொடுக்குது சாது

காலையில் அழைக்குதையா தலைநோவுகள்ளு
காப்புகட்டிதிரிகுதையா தலைநோவுகள்ளு
காலையிலழைக்குது கடை யில்குந்தவைக்குது
வேலையைகெடுக்குது வீண்சண்டைபோடுது சாது

காசியிருந்தால்அழைக்குதையா பாழுங்கள்ளுயிது
கடன்கேட்டால்முரைக்குதையா பாழுங்கள்ளுயிது
காசிருந்தால்அழைக்குது கடன்கேட்டால்மொரைக்குது
மோசப்படுத்துதுமூலையிலேவொரங்குது

ஓரக்கங்கொடுக்குதையா கள்ளுயில்லாவிட்டால்
உட்கார்ந்துறங்குதையா அதுஊமையைப்போல்

Library's copy imperfect : all after p. 6 wanting.